# RLA ACADEMY

RLA ACADEMY

# 2025

# TNPSC

# ALL EXAMS

## தமிழ் தகுதித்தேர்வு
## தமிழ் மதிப்பீட்டுத்தேர்வு









புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில்

6 முதல் 10-ம் வகுப்பு வரை

தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

# அலகு–01

## இலக்கணம் (25 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| | எழுத்து | 1–25 |
| 1. | பிரித்து எழுதுதல் & சேர்த்து எழுதுதல் | 2 |
| 2. | சந்திப்பிழை | 11 |
| 3. | குறில், நெடில் வேறுபாடு | 15 |
| 4. | லகர, ழகர, ளகர வேறுபாடு | 16 |
| 5. | னகர, ணகர வேறுபாடு | 18 |
| 6. | ரகர, றகர வேறுபாடு | 20 |
| 7. | இன எழுத்துகள் | 21 |
| 8. | சுட்டு எழுத்துகள் | 22 |
| 9. | வினா எழுத்துகள் | 23 |
| 10. | ஒருமைப் பன்மை அறிதல் | 23 |
| | சொல் | 26–44 |
| 11. | வேர்ச்சொல் அறிதல் | 26 |
| 12. | வினைமுற்று | 30 |
| 13. | பெயரெச்சம் | 32 |
| 14. | வினையெச்சம் | 34 |
| 15. | வினையாலணையும் பெயர் | 35 |
| 16. | அயற்சொல் – தமிழ்ச்சொல் | 37 |
| 17. | எதிர்ச்சொல்– வினைச்சொல் | 38 |
| 18. | எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் | 43 |
| 19. | இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல். | 44 |


RLA ACADEMY

## 1. பிரித்து எழுதுதல் & சேர்த்து எழுதுதல்

1. நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) நிலயென்று ஆ) நிலவென்று

இ) நிலவன்று ஈ) நிலவுஎன்று

2. தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) தமிழுங்கள் ஆ) தமிழெங்கள்

இ) தமிழுங்கள் ஈ) தமிழ்எங்கள்

3. 'அழுதென்று' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அமுது + தென்று ஆ) அமுது + என்று

இ) அமுது + ஒன்று ஈ) அமு + தென்று

4. 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) செம்மை + பயிர் ஆ) செம் + பயிர்

இ) செமை + பயிர் ஈ) செம்பு + பயிர்

5. 'செந்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .

அ) செந் + தமிழ் ஆ) செம் + தமிழ்

இ) சென்மை + தமிழ் ஈ) செம்மை + தமிழ்

6. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்

இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்

7. பாட்டு+இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) பாட்டிருக்கும் ஆ) பாட்டுருக்கும்

இ) பாடிருக்கும் ஈ) பாடியிருக்கும்

8. எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் –

அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை

இ) எட்டுதிசை ஈ) எட்டி இசை

9. பாகற்காய் – பாகு + அல் + காய்

10. அஃறிணை – அல் + திணை

11. 'இடப்புறம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.

அ) இடன் + புறம் ஆ) இடை + புறம்

இ) இடம் + புறம் ஈ) இடப் + புறம்

12. 'சீரிளமை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) சீர் + இளமை ஆ) சீர்மை + இளமை

இ) சீரி + இளமை ஈ) சீற் + இளமை

13. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம்

இ) சிலம்புதிகாரம் ஈ) சில பதிகாரம்

14. கணினி + தமிழ் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கணினிதமிழ் ஆ) கணினித்தமிழ்

இ) கணிணிதமிழ் ஈ) கனினிதமிழ்

15. 'வெண்குடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

## 2. சந்திப்பிழை

- வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும்.
- இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

### வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

### வல்லினம் மிகும் இடங்கள்

➤ ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர்.

மண்வெட்டி கொண்டு வா. மண்வெட்டிக் கொண்டு வா.

➤ இவற்றில் முதல் தொடர் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.

✓ தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்
✓ வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின் பாற்படும்.
✓ சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அச்சட்டை<br>அந்தப்பக்கம்<br>இந்தக்கவிதை. | அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டு திரிபுகளை அடுத்தும் வல்லினம் மிகும் |
| 2. | எத்திசை?<br>எந்தப்பணம்?<br>எந்தத்திசை?<br>எந்தச்சட்டை? | எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |
| 3. | கதவைத்திற<br>தகவல்களைத்திரட்டு<br>காட்சியைப்பார்<br>தலையைக் காட்டு<br>பாடத்தைப்படி. | ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 4. | முதியவருக்குக்கொடு<br>மெட்டுக்குப்பாட்டு<br>ஊருக்குச் செல்<br>எனக்குத் தெரியும்<br>அவனுக்குப் பிடிக்கும் | கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |

| | | |
|---|---|---|
| 5. | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு | என, ஆக போன்ற சொல்லுருபுகளின் பின் வல்லினம் மிகும் |
| 6. | எழுதிப் பார்த்தாள்.<br>ஓடிக் களைத்தான். | இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும் |
| 7. | பெற்றுக் கொண்டேன்.<br>படித்துப் பார்த்தார். | உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும் |
| 8. | மரம் + சட்டம் = மரச்சட்டம்,<br>வட்டம் + பாறை = வட்டப்பாறை. | மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும். |
| 9. | அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும் |
| 10. | இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| 11. | மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின் பின் வல்லினம் மிகும். |
| 12. | எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகும். |
| 13. | தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| 14. | கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை<br>செல்லாக்காசு,<br>எழுதாப்பாடல | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும் |
| 15. | கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| 16. | ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| 17. | புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும் |
| 18. | கிழக்குக்கடல்,<br>மேற்குச்சுவர்,<br>வடக்குத்தெரு,<br>தெற்குப்பக்கம் | திசைப் பெயர்களின் பின் வலிமிகும். |
| 19. | மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |
| 20. | தாமரைப்பாதம்<br>தாய்த்தமிழ்.<br>மலர்ப்பாதம், | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| 21. | சாலப்பேசினார்<br>தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச் சொற்களின் பின் வல்லினம் மிகும். |
| 22. | நிலாச் சோறு<br>கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்து வரும் ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும். |

# 3. குறில், நெடில் வேறுபாடு

## 1. குறில் நெடில்

ஓடோடி வந்தான்.

- இத்தொடரில் 'ந்' மற்றும் 'ன்' இரண்டும் மெய் எழுத்துகள். அவற்றை விடுத்து, மீதம் உள்ள எழுத்துகளில்,
- ஓ டோ தா – இவை மூன்றும் நெடில் எழுத்துகள்.
- டி வ – இவை இரண்டும் குறில் எழுத்துகள்.
- நல்ல தமிழில் எழுத குறில், நெடில் வேறுபாடு அறிவது அடிப்படை அறிவாகும்.

## 2. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு

- செய், சேய் என்னும் இரண்டு சொற்களைப் பாருங்கள்.
- செ இஃது ஒற்றைக்கொம்பு.
- சே இஃது இரட்டைக்கொம்பு.
- ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பால் பொருள் எப்படி மாறுகிறது பாருங்கள்.
- இதனைச் செய், தாய்சேய் நலவிடுதி.
- ச் என்பது மெய்யெழுத்து, எ என்பது உயிரெழுத்து.
- இரண்டும் சேரும்போது செ. இது குறில்.
- ச் உடன் ஏ சேரும்போது சே. இது நெடில்.

## 3. ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்புகளோடு துணை எழுத்துச் சேரும்போது ஏற்படும் மாற்றங்களைப் பாருங்கள்.

கொடி பறக்கும் கோடிப்பணம் கிடைக்கும்

க் + ஒ – இரண்டும் சேர்ந்தால் கொ. இது குறில்.

க் + ஓ – இரண்டும் சேர்ந்தால் கோ. இது நெடில்.

கீழ்க்காணும் தொடர்களைக் குறில் நெடில் வேறுபாடு அறிந்து நிரப்புக.




1) அமுதன் _____________ குடித்தான். (பால் / பல்)
2) தென்றல் ____________ படித்தாள். (படம் / பாடம்)
3) சிற்பி __________ செதுக்கினான். (சிலை / சீலை)
4) கடை ஏழு வள்ளல்களுள் ஒருவர் _______ (பாரி / பரி)
5) முகிலனின் பாட்டி __________ கூறுவார். (கதை / காதை)

## மயங்கொலிகள்

மணம் – மனம்

- மேலே உள்ள இரண்டு சொற்களையும் கவனியுங்கள். உச்சரிக்கும் போது ஏறத்தாழ ஒன்று போலவே ஒலிக்கின்றன.
- ஆனால் இரண்டுக்கும் இடையே பொருள் வேறுபாடு உண்டு.
- இவ்வாறு உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை மயங்கொலிகள் என்கிறோம்.
- ண, ன, ந    ல, ழ, ள    ர,ற ஆகிய எட்டும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

## 4. லகர, ழகர, ளகர வேறுபாடு

| ல | ழ | ள |
|---|---|---|
|   |   |   |
| ல–நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் பற்களின் அடியைத் தொடுவதால் லகரம் தோன்றும். இது 'வ' போல இருப்பதால் 'வகர லகரம்' என்கிறோம். | ள– நா (நாவின் இருபக்கங்கள் தடித்து) மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் ளகரம் தோன்றும். இதனைப் பொது ளகரம் என்கிறோம். இது 'ன' போல இருப்பதால் 'னகர ளகரம்' என்று கூறுவர். | ழ– நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ழகரம் தோன்றும். (ளகரமும் ழகரமும் ஒரே இடத்தில் ஒலிக்கப்படும்). ழ தமிழுக்கே சிறப்பானது. எனவே இதனைச் சிறப்பு ழகரம் என்று அழைக்கிறோம். இது 'ம' போல இருப்பதால் 'மகர ழகரம்' என்று கூறுவது இலக்கண மரபு. |
| விலை –பொருளின் மதிப்பு | விழை – விரும்பு | விளை – உண்டாக்குதல் |
| இலை–செடியின் இலை | இழை –நூல் இழை | இளை –மெலிந்து போதல் |

| லகர, ளகர, ழகர ஒலி வேறுபாடு | | |
|---|---|---|
| அலை –நீரலை | அளை –வளை | அழை –கூப்பிடுதல் |
| உலவு –நடுமாடு | உளவு – வேவு | உழவு – பயிர்த்தொழில் |
| வால் –உறுப்பு | வாள்– கருவி | வாழ் –வாழ்தல் |
| ஒலி– ஓசை | ஒளி– வெளிச்சம் | ஒழி – நீக்கு |
| கலம் –கப்பல் | களம் –இடம் | |
| கொல்– கொணருதல் | கொள் –பெற்றுக்கொள் | |
| தாள்– நாக்கு | தாள்– பாதம் | தாழ்– பணிந்துபோ |
| வலி –வலிமை | வளி – காற்று | வழி– பாதை, சாலை |
| வெல்லம்–இனிப்புக்கட்டி | வெள்ளம்– நீர் | |

# 11. வேர்ச்சொல் அறிதல்

- ஒரு சொல்லின் மூலச்சொல்லே அச்சொல்லின் வேர்ச்சொல் எனப்படும்.
- இதனை மேலும் பிரிக்க முடியாது.
- வேர்ச்சொல் என்பது பொதுவாகக் கட்டளையாகவோ, ஏவலாகவோ இருக்கும்.

## பகுபதம், பகாப்பதம்

- பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும்.
- பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
- இது பெயர்ப் பகுபதம். வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

### பகுபதம்

வேலன் – வேல் + அன் எனப் பிரிக்கலாம்.

படித்தான் – படி + த் + த் + ஆன் எனப் பிரிக்கலாம்.

இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர்.

பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்.

| பெயர்ப் பகுபதம் | வினைப் பகுபதம் |
|---|---|
| பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர். | பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும். |
| 1. பொருள் – பொன்னன் (பொன் + அன்)<br>2. இடம் – நாடன் (நாடு + அன்)<br>3. காலம் – சித்திரையான் (சித்திரை + ஆன்)<br>4. சினை – கண்ணன் (கண் + அன்)<br>5. பண்பு – இனியன் (இனிமை + அன்)<br>6. தொழில் – உழவன் (உழவு + அன்) | (எ.கா.)<br>உண்கின்றான் – உண் + கின்று + ஆன் |

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்: பகாப் பதமாக அமையும்: வினைச்சொல்லில் ஏவலாகவும். பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |

# அலகு-02

## சொல்லகராதி (15 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 20. | எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல் | 2 |
| 21. | ஓரெழுத்து ஒரு மொழி | 7 |
| 22. | உரிய பொருளைக் கண்டறிதல் | 8 |
| 23. | ஒரு பொருள் தரும் பல சொற்கள் | 10 |
| 24. | பொருந்தா சொல்லைக் கண்டறிதல் | 16 |
| 25. | அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல் | 22 |
| 26. | ஒருபொருள் பன்மொழி | 11 |
| 27. | இருபொருள் குறிக்கும் சொற்கள் | 15 |
| 28. | பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு | 25 |
| 29. | சொல்லும் பொருளும் அறிதல் | 28 |
| 30. | ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல். | 28 |
| 31. | கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் | 28 |
| 32. | பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் | 28 |
| 33. | ஊர்ப் பெயர்களின் மரூஉ வை எழுதுக | 29 |
| 34. | பிழை திருத்துக. (எ.கா.) ஒரு ஓர் | 30 |
| 35. | பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் | 31 |
| 36. | பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் | 34 |
| 37. | சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல் | 36 |
| 38. | அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் | 37 |
| 39. | பொருள் தரும் ஓர் எழுத்து | 37 |
| 40. | பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக | 39 |


RLA ACADEMY

## 20. எதிர்ச்சொல்லை எடுத்தெழுதல் – 17. எதிர்ச்சொல்

1. நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

அ) போக்குதல் ஆ) தள்ளுதல் இ) அழித்தல் *ஈ) சேர்த்தல்*

2. எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல்

*அ) அரிது* ஆ) சிறிது இ) பெரிது ஈ) வறிது

3. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்

*அ) மறைந்த* ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய

4. 'சோம்பல்' என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல்.

அ) அழிவு ஆ) துன்பம் *இ) சுறுசுறுப்பு* ஈ) சோகம்

5. அணுகு – விலகு
6. ஐயம் – தெளிவு
7. ஊக்கம் – சோர்வு
8. உண்மை – பொய்மை
9. வெந்தார் – வெந்திலர்
10. வைக்கிறார் –வைக்கின்றிலர்
11. இடும்பை –இன்பம்
12. வீழ்வேன் –வீழேன்
13. வீழ்ந்தேன்– வீழ்ந்திலேன்
14. விட்டன –விடா
15. வாழ்வாய் – வாழாய்
16. வருகின்றன –வருகின்றில
17. வரும் – வாரா
18. வருவான்– வாரான்
19. வருகின்றான் –வருகின்றிலன்
20. வந்தான் –வந்திலான்
21. மடிவார் –மடியார்
22. மடிந்தார் –மடிந்திலர்
23. பார்ப்பான் –பாரான்
24. நோவு – நோகாய்
25. நொந்தனை – நொந்தில
26.நீந்துகின்றனர்–நீந்துகின்றிலர்
27. நிற்கின்றன – நிற்கின்றிலர்
28. நிற்பாள் – நில்லாள்
29. நின்றான் – நின்றிலன்
30. நடுங்கும் – நடுங்கா
31. நடுங்கின –நடுங்கிற்றில
32. நடந்தாய் – நடிந்திலை
33.தோண்டுவார் – தோண்டார்
34.தோண்டிலர்– தோண்டிற்றிலர்
35. தொடுவாள் – தொடாள்
36. தொட்டான் – தொட்டிலன்

# 23. ஒரு பொருள் தரும் பலசொற்கள்

பூ, வா, அறம், புத்தகம்

- இவற்றில் முதல் இரு சொற்கள் ஓரெழுத்தைக் கொண்டவை. அடுத்த இரண்டு சொற்களும் மூன்று, நான்கு எழுத்துகளைக் கொண்டவை. இவை அனைத்தும் பொருள் தருகின்றன.
- இவ்வாறு ஓர் எழுத்து தனித்தும் ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தும் வந்து பொருள் தருவது சொல் எனப்படும். மொழி, பதம், கிளவி என்பன சொல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களாகும்.
- இலக்கண முறைப்படி பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகைப்படும்.
- அதேபோல் இலக்கிய வகையில் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

## இயற்சொல்

கடல், கப்பல், எழுதினான், படித்தான்

- இவற்றின் பொருள் இயல்பாகவே எளிதில் விளங்குகிறது. இவ்வாறு எளிதில் பொருள் விளங்கும் வகையில் அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.
- இயற்சொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.
- (எ.கா)

| | | | |
|---|---|---|---|
| மண், பொன் | பெயர் இயற்சொல் | அவனை, அவனால் | இடை இயற்சொல் |
| நடந்தான், வந்தான் | வினை இயற்சொல் | மாநகர் | உரி இயற்சொல் |

## திரிசொல்

வங்கூழ், அழுவம், சாற்றினான், உறுபயன்

- இச்சொற்கள் இலக்கியங்களில் பயின்று வரும் சொற்களாகும். இவை முறையே காற்று, கடல், சொன்னான், மிகுந்த பயன் எனப் பொருள் தரும்.
- இவ்வாறு கற்றோர்க்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.
- திரிசொல் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகையிலும் வரும்.
- (எ.கா)

| | | | |
|---|---|---|---|
| அழுவம். வங்கம் | பெயர்த் திரிசொல் | அன்ன, மான | இடைத் திரிசொல் |
| இயம்பினான். பயின்றாள் | வினைத் திரிசொல் | கூர், கழி | உரித் திரிசொல் |

- திரிசொற்களை ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் எனவும், பல பொருள் குறித்த ஒரு திரிசொல் எனவும் இருவகைப்படுத்தலாம்.
- வங்கம், அம்பி, நாவாய் – என்பன கப்பல் என்னும் ஒரே பொருளைத் தருவதால் ஒரு பொருள் குறித்த பல திரிசொற்கள் என்பர்.

## 24. பொருந்தா சொல்லைக் கண்டறிதல்

**வினாத்தாளில் இப்பகுதிக்கான வினாவில் கொடுக்கப்படும் நான்கு சொற்களில் மூன்று சொற்கள் ஏதோ ஒரு வகையில் ஒற்றுமை உடையனவானக இருக்கும் ஒரு செயல் மட்டும் மூன்றுடன் பொந்தாமல் தனித்து நிற்கும் அதனைக் கண்டறிதலுக்கான வழிமுறைகள் இங்கே கூறப்படுகின்றன.**

1. முத்தேன் – கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன்

2. முக்கனி – மா, பலா, வாழை

3. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்

4. இருதிணை – உயர்திணை, அஃறிணை

5. அறுசுவை – இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு.

6. இருமை – இம்மை, மறுமை

7. இருசுடர் – ஞாயிறு, திங்கள்

8. ஈரெச்சம் – பெயரெச்சம்,வினையெச்சம்

9. மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை

10. முக்காலம் – இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம்

11. முந்நீர் – ஆற்று நீர், ஊற்று நீர்,மழை நீர்

12. முப்பால் – அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்,

13. முப்பகை – காமம், வெகுளி, மயக்கம்.

14. முக்குடை – சந்திராதித்தம், சகலாபாசனம், நித்தவிநோதம்

15. மூவேந்தர் – சேரன், சோழன், பாண்டியன்.

16. மூன்று ஒளி மண்டலங்கள் – ஆலோகம், பிரபாமூர்த்தி, கனப்பிரபை.

17. திரிபலை – நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய்.

18. நான்மறை – ரிக், யஜுர், சாமம், அதர்வணம்.

19. நாற்குணம் – அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு.

20. நாற்படை – தேர், யானை, காலா, குதிரை.

21. நாற்றிசை – கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

22. நாற்பால் – அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்.

23. நாற்பொருள் – அறம், பொருள், இன்பம், வீடு.

24. நாற்கரணம் – மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

# 25. அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்

## தமிழ் எழுத்துக்கள் அட்டவணை

| ஆயுத எழுத்து -1 | உயிர் எழுத்துக்கள் -12 | | | | மெய் எழுத்துக்கள் -18 | | | உயிர்மெய் எழுத்துக்கள் -216 | | | தமிழ் எழுத்துக்கள்-247 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

**1. பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு**

***பழங்கள், பாரதம், பின்னிரவு, பீலி, புதுமை, பூமி, பெண்கள், பேருந்து, பையன், பொதுக்கூட்டம், போக்குவரத்து***

**2. பூனை, தையல், தேனீ, ஓணான், மான், வெளவால், கிளி, மாணவன். மனிதன், ஆசிரியர், பழம்**

***ஆசிரியர், ஓணான், கிளி, தேனி, தையல், பழம், பூனை, மனிதன், மாணவன், மான், வெளவால்***

**3. ஒழுக்கம், உயிரி, ஆடு, எளிமை, அன்பு, இரக்கம், ஓசை, ஐந்து, ஈதல், ஊக்கம், ஏது, ஔவை**

***அன்பு, ஆடு, இரக்கம், ஈதல், உயிரி, ஊக்கம், எளிமை, ஐந்து, ஏது, ஐந்து, ஒழுக்கம், ஓசை, ஔவை***

# 35. பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல்

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| ➤ பேச்சு வழக்கு என்பது வாயினால் பேசுவது ஆகும்.<br>➤ பேச்சு வழக்கு ஆனது சரியான இலக்கிய நடையில் அமைவது கிடையாது.<br>➤ பேச்சு வழக்கில் சொற்கள் குறுகி ஒலிக்கும்.<br>➤ (எ.கா)<br>போயி, பிடிக்கிறாங்க, வளருது, இறங்குறாங்க, வாரான் | ➤ எழுத்து வழக்கு என்பது கையினால் எழுதுவது ஆகும்.<br>➤ எழுத்து வழக்கு ஆனது சரியான இலக்கிய நடையில் அமைவது உண்டு.<br>➤ எழுத்து வழக்கில் சொற்கள் முழுமையான எழுதப்படும்.<br>➤ (எ.கா)<br>போய், பிடிக்கின்றனர், வளர்கின்றது, இறங்குகின்றனர், வருகின்றான் |

| | |
|---|---|
| 1. அடமழை – *அடைமழை* | 2. அருவாமனை – *அரிவாள்மனை* |
| 3. அருகாமையில் – *அருகில்* | 4. அண்ணாக்கயிறு – *அரைஞாண் கயிறு* |
| 5. அமக்களம்– *அமர்க்களம்* | 6. அவரக்காய் – *அவரைக்காய்* |
| 7. அடயாளம் – *அடையாளம்* | 8. அப்ளம் – *அப்பளம்* |
| 9. அகண்ட – *அகன்ற* | 10. அடிச்சுட்டா – *அடித்துவிட்டாள்* |
| 11. அத்தினி – *அத்தனை* | 12. அறுவறுப்பு– *அருவருப்பு* |
| 13. அங்கிட்டு – *அங்கு* | 14. அவுந்து– *அவிழ்ந்து* |
| 15. அதுகள் – *அவை* | 16. ஆச்சி – *ஆட்சி* |
| 17. அவங்க– *அவர்கள்* | 18. ஆம்பிள்ளை– *ஆண்பிள்ளை* |
| 19. ஆத்திற்கு– *ஆற்றிற்கு* | 20. ஆச்சு – *ஆயிற்று* |
| 21. இடதுபக்கம் – *இடப்பக்கம்* | 22. இன்று – *இன்றைக்கு* |
| 23. இடதுகை – *இடக்கை* | 24. இத்தினை– *இத்தனை* |
| 25. இரும்பல் – *இருமல்* | 26.இங்கிட்டு – *இங்கு* |
| 27. இளனி– *இளநீர்* | 28. இறச்சி– *இறைச்சி* |
| 29. இன்னும் – *இன்னும்* | 30. இடைபோடு – *எடைபோடு* |
| 31. இவையன்று – *இவையல்லை* | 32. இத்துபோதல் – *இற்றுப்போதல்* |
| 33. ஈர்கலி– *ஈர்கொல்லி* | 34.உசிர் – *உயிர்* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓ | சென்று தங்குதல், மதகு நீர் தங்கும் பலகை. | க | நெருப்பு. | கா | சோலை. |
| கு | பூமி | கூ | கூப்பிடு. | கை | கரம். |
| கோ | அரசன். | கௌ | 'கௌவு' என்று ஏவுதல். | சா | இறத்தல், 'சாவு' என்று ஏவுதல். |
| சே | சிவப்பு. | சோ | மதில். | தா | 'கொடு' என்று ஏவுதல். |
| தீ | நெருப்பு. | து | உண் என்னும் ஏவல். துக் கொற்றா | தூ | தூய்மை. |
| தை | தையல் எனப்படும் பெண், 'தை' என்று ஏவுதல். | ந | சிறப்பு. | நா | நாக்கு. |
| நீ | முன்னிலை ஒருமைப் பெயர் | நூ | எள். | நே | நேசம். |
| நை | நைதல். | நொ | மென்மை. | நோ | வலி. |
| நௌ | மரக்கலம், கப்பல். | பா | பாடல். | பி | அழகு. |
| பீ | கழிவு. | பூ | மலர். | பே | அச்சம். |
| பை | பசுமை. | போ | 'செல்' என்று ஏவுதல். | மா | ஒரு வகை மரம். |
| மீ | மிகுதியானது. | மூ | மூன்று. | மே | மேன்மை. |
| மை | மசி (ink). | மோ | மொள்ளுதல். | யா | யாவை' என்ற பொருள்படும் கேள்விப்பெயர். |
| வா | வா' என்று அழைத்தல். | வி | விசை. | வீ | பறவை. |
| வை | 'வை' என்று ஏவுதல். | | | | |

| | | | |
|---|---|---|---|
| கிள்ளி, வளவன், அபயன் | சோழன் | பூ, தாவுகின்ற மான் | தாமரை |
| பாதம், முயற்சி, காகிதம் | தாள் | அலை, வெற்றிலை | திரை |
| மாதம், நிலவு | திங்கள் | உயர்ந்த அழகு, செல்வம் | திரு |
| அலை, விளக்குத் திரி | திரி | துண்டு செய், ஆடை | துணி |
| தைத்தல், மாதம் | தை | பெண், தைத்தல் | தையல் |
| சிரிப்பு, அணிகலன் | நகை | கயிறு, வெட்கம், வட்டத்தின் நடுவில் வரையும் கோடு | நாண் |
| விரும்பு, தேசம் | நாடு | பாம்பு, துத்தநாகம் | நாகம் |
| வாசி, படிக்கட்டு, அளக்கும் கருவி | படி | கல்விக்கூடம், படுக்கை, தொழுமிடம் | பள்ளி |
| பணிவு, அணிகலன் | பணி | உலகம், காண் | பார் |
| மேகம், பெருங்காற்று | புயல் | பெண் யானை, பிடித்துக்கொள் | பிடி |
| அறிவு, நிலா | மதி | சோம்பல், இற | மடி |
| வீரம், பாவம் | மறம் | திருமணம், கலத்தல் | மணம் |
| பெரிய, விலங்கு, மாமரம் | மா | பொழுது, தார் | மாலை |
| யானை, கரும்பு | வேழம் | தலை, செய்துமுடி, கட்டு | முடி |
| உண்மை, உடம்பு | மெய் | மலை, தீட்டு, எல்லை | வரை |
| வலிமை, நோவு | வலி | யானை, கோழி, கடல், சங்கு | வாரணம் |
| பதில், காளை | விடை | புலி, வேங்கைமரம் | வேங்கை |

# அலகு-03

## எழுதும் திறன் (15 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 41. | சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் | 2 |
| 42. | தொடர் வகைகள் | 6 |
| 43. | செய்வினை, செயப்பாட்டு வினை தன்வினை, பிறவினை | 11 |
| 44. | ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல். | 13 |
| 45. | மரபுத் தமிழ்: திணை மரபு | 15 |
| 46. | உயர்திணை, அஃறிணை | 15 |
| 47. | இளமைப் பெயர் | 17 |
| 48. | ஒலிமரபு | 17 |
| 49. | வினைமரபு | 18 |
| 50. | தொகை மரபு | 18 |
| 51. | நிறுத்தல் குறியீடுகள் | 23 |


RLA ACADEMY

# 41. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல்

தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.

(எ.கா.) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

1. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.
2. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

வார்த்தைகள் மாற்றி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்றொடரை சீர் செய்து சரியான சொற்றொடராக மாற்றி அமைத்து தேர்ந்தெடுக்கவேண்டும்.

எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்ற முறைப்படி அமைந்திருந்தால் அதுவே சரியான சொற்றொடர் ஆகும்.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் "எழுவாய்" எனப்படும். | எழுவாய் ஒரு வினையை செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படுபொருள்" எனப்படும். | ஒரு தொடரில் வினைச்சொல் (பயன்) நிலைத்து நிற்கும் இடத்தை "பயனிலை" என்பர். |
| *எ.கா:*<br>கனகாம்பரம் பூத்தது | *எ.கா:*<br>மீனா கனகாம்பரத்தைச் சூடினாள் கனகாம்பரத் | *எ.கா:*<br>கனகாம்பரம் பூத்தது |

1. மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

1. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.
2. *பற்றுக பற்றினை பற்றற்றான் அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.*
3. பற்றுக பற்றற்றான் அப்பற்றைப் பற்றினை பற்றுக பற்று விடற்கு.
4. பற்றுக பற்றற்றான் பற்றினை பற்றுக பற்று அப்பற்றைப் விடற்கு

2. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்

1. அறிவாற்றலின் அறியாமை மிகப்பெரிய எதிரி அல்ல
2. மிகப்பெரிய எதிரி அல்ல அறியாமை அறிவாற்றலின்
3. அறியாமை மிகப்பெரிய எதிரி அல்ல அறிவாற்றலின்
4. *அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரி அல்ல*

3. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல்

1. இலைக்குத் தமிழர் பண்பாட்டில் வாழை தனித்த இடமுண்டு.
2. தனித்த இடமுண்டு. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத்
3. *தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.*
4. தமிழர் பண்பாட்டில் தனித்த இடமுண்டு வாழை இலைக்குத்

# 42. தொடர் வகைகள்

## எழுத்து

### சார்பெழுத்து

- உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை. ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம். ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம். மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள் ஆகும்.
- அளபெடுத்தல் நீண்டு ஒலித்தல்.
- பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.
- எ.கா. அம்மாஅ. தம்பீஇ

### 1. உயிர்மெய்

- மெய் எழுத்தும் உயிர் எழுத்தும் சேர்ந்து உயிர்மெய் எழுத்து பிறக்கின்றது.
- மெய்யொலி முன்னும் உயிர் ஒலி பின்னுமாக ஒலிக்கப்படினும் உயிரின் மாத்திரை அளவே உயிர்மெய்க்கும் அமைவதால் இவை மெய் உயிர் என பெயர் பெராமால் உயிர்மெய் என அழைக்கப்படுகிறது.

### 2. ஆய்தம் (ஃ) (அரை மாத்திரை)

- இதன் வேறு பெயர்கள் – தனி நிலை, முப்புள்ளி , முப்பாற்புள்ளி மற்றும் முற்றாய்தம்
- ஆய்த எழுத்து ஒரு சொல்லில் இடம்பெறகின்ற போது தனக்கு முன் ஒரு குற்றெழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்று நடுவில்தான் வரும்.
- எ.கா அஃது, எஃகு, கஃசு

### அளபெடை

- இருக்கும் அளவைக் காட்டிலும் மிகுந்து ஒலிக்கச் செய்வதை அளபெடை என்பர்
- புலவர்கள் தாம் இயற்றும் செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்வதற்காகவும், செய்யுளின் இனிய ஓசைக்காகவும் சொல்லின் இன எழுத்தை சேர்த்து ஓசையை நிறைவு செய்வர் இதனை அளபெடை என்கிறோம்.
- அளபெடை இரண்டு வகைப்படும்.
  1. உயிரளபெடை
  2. ஒற்றளபெடை

### 3. உயிரளபெடை

- செய்யுளில் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.
- உயிரளபெடை மூன்று வகைப்படும்.

RLA ACADEMY
"Be Ready to Learn. You will Learn to Achieve"
ALL TECHNICAL EXAMS
PDF BOOK MATERIAL BOOK AVAILBLE
96004 20486
rlaalv8797@gmail.com
www.rlaacademy.com
❖TNPSC ❖TNMAWS ❖SSC ❖RRB ❖TRB

## 43. தன்வினை, பிறவினை–

## செய்வினை, செயப்பாட்டு வினை

<table>
<tr><th>எழுவாய்</th><th colspan="2">பயனிலை</th><th>செயப்படுபொருள்</th></tr>
<tr><td>சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.</td><td colspan="2">ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.</td><td>எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே, செயப்படுபொருள் ஆகும்.</td></tr>
<tr><td>எட்வர்டு வந்தான்.<br>இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும்</td><td colspan="2">கனகாம்பரம் பூத்தது.<br>இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும்.</td><td>மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.</td></tr>
<tr><td rowspan="3">தோன்றா எழுவாய்<br><br>படித்தாய்.<br>இத்தொடரில் படித்தாய் என்பது பயனிலை.<br>நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை.<br>இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்.</td><td>வினைப் பயனிலை</td><td>நான் வந்தேன்.<br>இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.</td><td rowspan="3">இத்தொடரில், சொற்றொடர் எழுவதற்குக் காரணமாக அமைந்த மீனா என்னும் பெயர்ச்சொல்லே எழுவாய் ஆகும். அவ்வெழுவாயின் பயனிலை சூடினாள் என்பதாகும். எனில், மற்றொரு பெயர்ச்சொல்லான கனகாம்பரம் என்பது யாது? அது செயப்படுபொருள் என்று அழைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்ப் பயனிலை</td><td>சொன்னவள் கலா.<br>இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.</td></tr>
<tr><td>வினாப் பயனிலை</td><td>விளையாடுபவன் யார்?<br>இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.</td></tr>
</table>

- ❖ ஒரு தொடரில் எழுவாயும், செயப்படு பொருளும் பெயர்ச்சொல்லாகவும் பயனிலை வினைமுற்றாகவும் இருக்கும்.
- ❖ பயனிலை, அந்தத் தொடரின் பயன் நிலைத்து இருக்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.

- சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

## 45. மரபுத் தமிழ்: திணை மரபு

## 46. உயர்திணை, அஃறிணை

| இருதிணை | | |
|---|---|---|
| ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை (அல்திணை) என்றும் வழங்குவர். | | |
| | ஐம்பால் | |
| | பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால்–பகுப்பு, பிரிவு). இஃது ஐந்து வகைப்படும். | |
| உயர்திணைக்குரிய பால் பகுப்புகள் | ஆண்பால் | வீரன், அண்ணன், மருதன் |
| | பெண்பால் | மகள், அரசி, தலைவி |
| | பலர்பால் | மக்கள், பெண்கள், ஆடவர் |
| அஃறிணைக்குரிய பால் பகுப்புகள் | ஒன்றன்பால் | அஃறிணையில் ஒன்றனைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும். எ.கா. யானை, புறா, மலை |
| | பலவின்பால் | அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும். எ.கா. பசுக்கள், மலைகள் |

| மூவிடம் | | |
|---|---|---|
| தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப்படும். | | |
| இடம் | பெயர்/வினை | எடுத்துக்காட்டு |
| தன்மை | தன்மைப் பெயர்கள் | நான், யான், நாம், யாம்.... |
| | தன்மை வினைகள் | வந்தேன், வந்தோம் |
| முன்னிலை | முன்னிலைப் பெயர்கள் | நீ,நீர், நீவிர், நீங்கள |
| | முன்னிலை வினைகள் | நடந்தாய். வந்தீர், சென்றீர்கள்.... |
| படர்க்கை | படர்க்கைப் பெயர்கள் | அவன், அவள், அவர். அது, அவை... |
| | படர்க்கை வினைகள் | வந்தான். சென்றாள், படித்தனர். பேசினார்கள் பறந்தது. பறந்தன.... |

## வழு–வழாநிலை–வழுவமைதி

- இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.
- இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்
- இரு திணையும் ஐம்பாலும் மூவிடமும் காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தொடர்களில் இலக்கணப் பிழைகளுடன் வந்தால் அவையும்

# 51.நிறுத்தல் குறியீடுகள்

இன்றுமுதல், தோசைக்குத் துவையல் இல்லை.

இன்று, முதல்தோசைக்குத் துவையல் இல்லை.

இத்தொடர்களைப் பொருள்விளங்குமாறு படித்துப் பார்க்க.

இருதொடர்களுக்கும் வேறுபாடு அறியமுடிகிறதல்லவா?

முதல் தொடர் இன்றுதொடங்கித் தோசைக்குத் துவையல் இல்லை எனவும், அடுத்ததொடர் முதல் தோசைக்கு மட்டும் துவையல் இல்லை எனவும் வெவ்வேறு பொருள் தருகிறதன்றோ? இரண்டு தொடரும் ஒன்றே ஆயினும், இருவேறு பொருள்கள் தரக் காரணம் நிறுத்தக் குறியீடு தானே! அக்குறியீடுகள் குறித்து இங்குக் காண்போம்.

| நிறுத்தல் குறியீடுகள் | குறியீடுகள் வரும் இடம் | (எ.கா) |
|---|---|---|
| காற்புள்ளி (,) | பொருள்களை எண்ணும் இடங்களில் காற்புள்ளி வரும். | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன ஐந்திணைகள்.<br>நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள். |
| | கடிதத்தில் விளி முன் காற்புள்ளி வரும். | அன்புள்ள நண்பா. |
| | வினையெச்சங்களுக்குப் பின் காற்புள்ளி வரும். | பொழிலன் தோட்டத்திற்குச் சென்று, வாழை இலை பறித்து வந்தான். |
| | மேற்கோள் குறிகளுக்கு (") முன் காற்புள்ளி வரும். | குழந்தை நிலவைப் பார்த்து," நிலா நிலா ஓடி வா" என்று பாடியது. |
| | முகவரியில் இறுதி வரி நீங்க ஏனைய வரிகளின் இறுதியில் காற்புள்ளி வரும். | ச.ஆண்டாள், எண் 45, காமராசர் தெரு, திருவள்ளூர், |
| அரைப்புள்ளி (:) | ஒரே எழுவாயில் பல வாக்கியங்கள் தொடரும் இடத்தில் அரைப்புள்ளி வரும். | கரிகாலன் கங்கை வரை படையெடுத்துச் சென்றான்: கனக விசயருடன் போரிட்டான்.<br>சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம்: முத்தமிழ்க் காப்பியம்: மூவேந்தரையும் பாடும் காப்பியம். |
| | உடன்பாடு, எதிர்மறைக் கருத்துகளை ஒன்றாகக் கூறும் இடத்தில் அரைப்புள்ளி வரும். | நல்லவன் வாழ்வான்: தீயவன் தாழ்வான்.<br>இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு: பொறுமை இல்லை. |
| முக்காற்புள்ளி (:) | சிறு தலைப்பான தொகைச் சொல்லை விரித்துக் கூறும் இடத்தில் முக்காற்புள்ளி வரும். | முத்தமிழ்: இயல், இசை, நாடகம்.<br>மத்தேயு, 8 : 6<br>பெயர் : மணிமேகலை |

# அலகு –04

# கலைச் சொற்களை அறிதல்

## (15 கேள்விகள்)

RLA ACADEMY

## 52. கலைச் சொற்களை அறிதல்

| தமிழ்ச்சொல் | ஆங்கிலச்சொல் | தமிழ்ச்சொல் | ஆங்கிலச்சொல் |
|---|---|---|---|
| வலஞ்சுழி | Clock wise | இடஞ்சுழி | Anti Clock wise |
| இணையம் | Internet | தேடுபொறி | Search engine |
| முகநூல் | Facebook | புலனம் | Whatsapp |
| குரல்தேடல் | Voice Search | தொடுதிரை | Touch Screen |
| செயலி | App | மின்னஞ்சல் | E-mail |
| கண்டம் | Continent | தட்பவெப்பநிலை | Climate |
| வானிலை | Weather | வலசை | Migration |
| புகலிடம் | Sanctuary | புவி ஈர்ப்பு புலம் | Gravitational Field |
| மீத்திறன் கணினி | Super Computer | செயற்கை நுண்ணறிவு | Artificial Intelligence |
| செயற்கைக் கோள் | Satellite | நுண்ணறிவு | Intelligence |
| நல்வரவு | Welcome | சிற்பங்கள் | Sculptures |
| சில்லுகள் | Chips | ஆயத்த ஆடை | Readymade Dress |
| ஒப்பனை | Makeup | சிற்றுண்டி | Tiffin |
| பண்டம் | Commodity | பயணப்படகுகள் | Ferries |
| கடற்பயணம் | Voyage | தொழில் முனைவோர் | Entrepreneur |
| பாரம்பரியம் | Heritage | நுகர்வோர் | Consumer |
| கலப்படம் | Adulteration | வணிகர் | Merchant |
| நாட்டுப்பற்று | Patriotism | இலக்கியம் | Literature |
| கலைக்கூடம் | Art Gallery | மெய்யுணர்வு | Knowledge of Reality |
| அறக்கட்டளை | Trust | சாரண சாரணியர் | Scouts & Guides |
| தன்னார்வலர் | Volunteer | சமூகப் பணியாளர் | Social Worker |
| இளம் செஞ்சிலுவைச் சங்கம் | Junior Red Cross | உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை | Transplantation |

# அலகு-05

# வாசித்தல்

# புரிந்து கொள்ளும் திறன்

## (15 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 53. | கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் | 2 |
| 54. | உவமைத் தொடரின் பொருளறிதல் | 5 |
| 55. | மரபுத் தொடரின் பொருளறிதல் | 5 |
| 56. | பழமொழிகள் பொருளறிதல் | 8 |
| 57. | ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன். | 15 |


RLA ACADEMY

## 53. கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. பழமொழியின் சிறப்பு _______________ சொல்வது

அ) விரிவாகச் ஆ) சுருங்கச் இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

2. நோயற்ற வாழ்வைத் தருவது சுத்தம்

3. உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த கொடைகள்.

இயற்கையின் அழகைக் கண்டு இன்புற்றால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் நமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் மட்டுமே நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

1. எதனை இயற்கை என்கிறோம்?

   இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம்.

2. இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?

   பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா

3. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?

   இயற்கையைப் பாதுகாத்தால் மட்டுமே நாம் நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

## 54.உவமைத் தொடரின் பொருளறிதல்

## 55.மரபுத் தொடரின் பொருளறிதல்

| எண் | தொடர் | பொருள் |
|---|---|---|
| 1 | கறையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல் | அத்துமீறல் |
| 2 | அச்சில் வார்த்தாற் போல் | உண்மைத் தன்மை, ஒரே சீராக |
| 3 | அவளை நினைத்து உரலை இடித்தாற் போல் | கவனம், எண்ணமும் செயலும் ஒத்து வராமை |
| 4 | நீர் மேல் எழுத்து போல | நிலையற்ற தன்மை |
| 5 | வேலியே பயிரை மேய்ந்தது போல | நம்பிக்கை துரோகம் |
| 6 | கிணற்றுத் தவளை போல | அறியாமை, அறிவின்மை |
| 7 | செவிடன் காதில் ஊதிய சங்கு போல,<br>குரங்கு கையில் பூமாலை போல,<br>விழலுக்கு இறைத்த நீர்,<br>கடலில் கரைத்த பெருங்காயம் போல் | பயனற்றது |
| 8 | மதில் மேல் பூனை போல | முடிவெடுக்காத நிலை |
| 9 | பசுத்தோல் போர்த்திய புலி | வஞ்சகம் |
| 10 | நீறு பூத்த நெருப்பு போல | பொய்த்தோற்றம் |
| 11 | இலைமறை காய் போல | மறைபொருள் |
| 12 | நீரும் நெருப்பும் போல | விலகுதல் |
| 13 | வெள்ளத்தனைய மலர் நீட்டம் | முயற்சிக்கேற்ற பலன் |
| 14 | எட்டாப்பழம் புளித்தது போல | விலகுதல் |
| 15 | நவில்தோறும் நூல் நயம்போல | பண்பாளரின் தொகுப்பு |
| 16 | அன்றளர்ந்த தாமரை போல | மகிழ்ச்சி |
| 17 | குன்றேறி யானை போர் கண்டது போல | செல்வத்தின் சிறப்பு |
| 18 | கனியிருப்ப காய்கவர்ந்தற்று | இன்னாச்சொல் |
| 19 | உள்ளங்கை நெல்லிக்கனி போல | தெளிவு |
| 20 | தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் | பாசம், பந்தம் |
| 21 | நகமும் சதையும் போல,<br>உயிரும் உடம்பும் போல். | ஒற்றுமை |
| 22 | மேகம் கண்ட மயில் போல,<br>தாயைக் கண்ட சேயைப் போல,<br>சுதந்திர பறவை போல்,<br>ஏழை பெற்ற செல்வம் போல் | மகிழ்ச்சி |
| 23 | சிறகு இழந்த பறவை போல | கொடுமை |
| 24 | வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல | அறிவற்ற தன்மை |
| 25 | காராண்மை போல ஒழுகுதல் | வள்ளல் தன்மை |
| 26 | புதையல் காத்த பூதம் போல,<br>நாண் அறுந்த வில் போல, | பயனின்மை |

# 56. பழமொழிகள் பொருளறிதல்

- பழமொழியை தொல்காப்பியம் 'முதுசொல்' என்று கூறுகிறது.
- பழமொழி நம் வாழ்க்கை முறையில் பெறும் முக்கியத்துவங்கள்
  - தமிழர்களின் பண்பாட்டோடும் கலாச்சாரத்தோடும் நெருங்கிய தொடர்புடையது பழமொழி.
  - பழமொழிகள் மூலம் தமிழர்கள் நற்பண்புகளையும் நல்ல வாழ்வியல் முறைகளையும் கற்றுக் கொண்டனர்.
  - பழமொழிகள் சுருக்கமாக இருந்தாலும் அரிய வாழ்வியலை எடுத்துக்கூறி நல்வழிப்படுத்தும்.
- பழமொழி என்பது சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் ஆகும்.
- ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகளைப் பழமொழி என்பர்.
- ஒரு கருத்தை, பொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சுவையாகவும் விளக்குவன பழமொழிகள்.
- மக்களின் நீண்ட கால வாழ்வியல் அனுபவத்தின் வெளிப்பாடுகளைச் சுருக்கமாகச் சொல்வதே பழமொழியாகும்.
- பழமொழிகளைக் கொண்டு பழமொழி நானூறு என்னும் நீதி நூல் படைக்கப்பட்டுள்ளது.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் பழமொழிக்கு என்றே ஒரு தனி நூலாக பழமொழி நானூறு உள்ளது. அந்த நூலில் 400 பழமொழிகள் உள்ளன.
- தமிழின் பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் (பொரு:479) பழமொழிகள் பற்றிய வரைமுறையாக "ஏதேனும் ஒரு சமூகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரக்கூடிய (அல்லது பயன்படுத்தக் கூடிய) ஆழ்ந்த அறிவினைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் கூறும் பழமையான மொழி பழமொழி எனலாம்." என்று விளக்குகிறது.
- பழமொழிகள் பொய்ப்பதில்லை என்று அகநானூறு (அகம்.101) குறிப்பிடுகிறது.

| எண் | பழமொழி | விளக்கம் |
|---|---|---|
| 1 | ஆறிலும் சாவு: நூறிலும் சாவு. | பொருள்:<br>ஆறு வயதிலும் சாவு வரும்:நூறு வயதிலும் சாவு வரும்.<br>உண்மையான பொருள்:<br>மகாபாரதத்தில் கர்ணன், பஞ்ச பாண்டவர்கள் (ஐவர்) பக்கம் இருந்தாலும், கௌரவர்கள் (நூறு பேர்) பக்கம் நின்றாலும், போரின் போது இறப்பு வரும். ஆதலால் துரியோதனன் மீதுள்ள நட்பின் காரணமாக கௌரவர்களிடமே இருக்கிறேன் என்று சொன்னது. |
| 2 | மாமியார் உடைத்தால் மண் குடம்: மருமகள் உடைத்தால் பொன் குடம். | பொருள்:<br>ஒரே தவறை மாமியார் செய்யும் போது அது பெரிதாகக் கருதப்படுவதில்லை. ஆனால், வீட்டுக்கு வந்த மருமகள் அதே தவறைச் செய்துவிட்டால், அதை மாமியார் பெரிதுபடுத்திவிடுகிறார் எனன்று பொருள் வருகிறது, |

# அலகு–06

# எளிய மொழி பெயர்ப்பு

## (15 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 58. | ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் | 2 |
| 59. | ஆவணங்களின் தலைப்பு கோப்புகள் கடிதங்கள் – மனுக்கள் – | 7 |
| 60. | மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல் | 7 |


RLA ACADEMY

# 56. ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும்

| ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் | ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|---|---|
| கரன்சிநோட் | பணத்தாள் | பேங்க் | வங்கி |
| செக் | காசோலை | டிமாண்ட் டிராஃப்ட் | வரைவோலை |
| டிஜிட்டல் | மின்னணு மயம் | டெபிட் கார்டு | பற்று அட்டை |
| கிரெடிட் கார்டு | கடன் அட்டை | ஆன்லைன் ஷாப்பிங் | மின்னணு வணிகம் |
| ஈ–காமர்ஸ் | இணையத்தள வணிகம் | மிஷின் | எந்திரம் |
| அயன்பாக்ஸ் | சலவைப்பெட்டி | ஸ்டூல் | முக்காலி, மொட்டான் |
| சேர் | நாற்காலி | புக்கிங் கார்டு | பதிவு அட்டை |
| விசிட்டிங் கார்டு | முகவரி அட்டை | டெய்லர் | தையற்காரர் |
| ஓனர் | உரிமையாளர் | பவர் மிஷின் | மின் விசைப்பொறி |
| திரட் | நூல் | கட்டிங் டேபிள் | துணிவெட்டும் மேசை |
| புக்கிங் நோட் | அளவுக்குறிப்பேடு | பட்டன் | பொத்தான் |
| டேப் | அளவு நாடா | சிசர் | கத்தரிக்கோல் |
| ஸ்கேல் | அளவுகோல் | ஸ்கூல் | பள்ளிக்கூடம் |
| காலேஜ் | கல்லூரி | ஐ.டி.ஐ. | தொழிற்கல்விப் பயிலகம் |
| பாலிடெக்னிக் | தொழிற்கல்வியகம் | டுடோரியல் காலேஜ் | தனிப் பயிற்சிக் கல்லூரி |
| யுனிவர்சிடி | பல்கலைக் கழகம் | ஒர்க் ஷாப் | பணிக்கூடம் |
| டெப்போ | கிடங்கு | வெல்டிங் ஷாப் | பற்றவைப்புப் பட்டறை |
| இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் | தொழிற்பேட்டை | எக்ஸ்போர்ட் | ஏற்றுமதி |
| ஆர்பர் | துறைமுகம் | ஏர்போர்ட் | வானூர்தி நிலையம் |
| ஜி.ஹெச். | பொது மருத்துவமனை | கே.எம்.சி. | கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி |
| ஆஸ்பிட்டல் | மருத்துவமனை | கலெக்டர் ஆபீஸ் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் |
| கோர்ட் | நீதிமன்றம் | ஐகோர்ட் | உயர் நீதிமன்றம் |
| சுப்ரீம் கோர்ட் | உச்ச நீதிமன்றம் | சப் கோர்ட் | சார்பு நீதிமன்றம் |
| லேபர் கோர்ட் | தொழிலாளர் நீதிமன்றம் | யூனியன் ஆபீஸ் | ஒன்றிய அலுவலகம் |
| போஸ்ட் ஆபீஸ் | அஞ்சல் நிலையம் | ரிஜிஸ்டர் ஆபீஸ் | பதிவு அலுவலகம் |
| தாசில்தார் ஆபீஸ் | வட்டாட்சியர் அலுவலகம் | ஸ்பெஷல் கோர்ட் | சிறப்பு வழக்கு நீதிமன்றம் |
| டிரான்ஸ்போர்ட் | போக்குவரத்து | எல்.ஐ.சி. | வாழ்நாள் காப்பீட்டுக் கழகம் |
| ரெயில்வே | இருப்புப் பாதை | பங்க் | விற்பனையகம் |

# அலகு–07

## இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்

## (15 கேள்விகள்)


| எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 61. | திருக்குறள் (20 அதிகாரங்கள்) | 5 |
| 62. | ஒழுக்கமுடைமை | 10 |
| 63. | பொறையுடைமை | 11 |
| 64. | ஊக்கமுடைமை | 12 |
| 65. | அறன் வலியுறுத்தல் | 13 |
| 66. | விருந்தோம்பல் | 14 |
| 67. | ஈகை | 15 |
| 68. | பெரியாரைத் துணைக்கோடல் | 16 |
| 69. | வினை செயல்வகை | 17 |
| 70. | அவையஞ்சாமை | 18 |
| 71. | கண்ணோட்டம் | 19 |
| 72. | அன்புடைமை | 20 |
| 73. | கல்வி | 21 |
| 74. | நடுநிலைமை | 21 |
| 75. | கூடா ஒழுக்கம் | 22 |
| 76. | கல்லாமை | 23 |
| 77. | செங்கோன்மை | 24 |
| 78. | பண்புடைமை | 25 |
| 79. | நட்பாராய்தல் | 26 |
| 80. | புறங்கூறாமை | 27 |
| 81. | அருளுடைமை | 28 |
| 82. | அறநூல் தொடர்பான செய்திகள் | 29 |
| 83. | நாலடியார், | 29 |
| 84. | நான்மணிக்கடிகை | 31 |
| 85. | பழமொழி நானூறு | 32 |
| 86. | முதுமொழிக்காஞ்சி | 33 |
| 87. | திரிகடுகம் | 34 |
| 88. | இன்னாநாற்பது | 35 |


RLA ACADEMY

"Be Ready to Learn. You will Learn to Achieve"
ALL TECHNICAL EXAMS
PDF BOOK MATERIAL BOOK AVAILBLE
RLA ACADEMY
96004 20486
rlaalv8797@gmail.com
www.rlaacademy.com
❖TNPSC ❖TNMAWS ❖SSC ❖RRB ❖TRB


| | | |
|---|---|---|
| 89. | சிறுபஞ்சமூலம் | 36 |
| 90. | ஏலாதி | 37 |
| 91. | அவ்வையார் பாடல்கள் | 38 |
| 92. | தமிழின் தொன்மை, | 39 |
| 93. | தமிழின் சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் | 44 |
| 94. | தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் | 64 |
| 95. | உ.வே.சாமிநாத ஐயர் | 64 |
| 96. | தெ.பொ.மீனாட்சி சுந்தரம் | 71 |
| 97. | சி.இலக்குவனார் | 73 |
| 98. | தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் | 78 |
| 99. | தேவநேய பாவாணர் | 78 |
| 100. | அகரமுதலி | 80 |
| 101. | பாவலரேறு பெருஞ்சித்திரனார் | 83 |
| 102. | ஜி.யு.போப் | 85 |
| 103. | வீரமாமுனிவர் | 87 |
| 104. | தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள் | 90 |
| 105. | பாவேந்தர் | 90 |
| 106. | டி.கே.சிதம்பரனாதர் | 94 |
| 107. | தவத்திரு குன்றக்குடி அடிகளார் | 95 |
| 108. | கண்ணதாசன் | 98 |
| 109. | காயிதே மில்லத் | 101 |
| 110. | தாரா பாரதி | 103 |
| 111. | வேலுநாச்சியார் | 104 |
| 112. | பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் | 106 |
| 113. | முடியரசன் | 107 |
| 114. | தமிழ் ஒளி | 108 |
| 115. | உருத்திரங்கண்ணனார் | 109 |
| 116. | கி.வா.ஜகந்நாதர் | 110 |
| 117. | நாமக்கல் கவிஞர் | 112 |


# 61. திருக்குறள்

## ஆசிரியர் குறிப்பு:



- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.
- தமிழுலகம் இவரை நாயனார், தேவர், முதற்பாவலர். தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில்புலவர், முதலிய சிறப்புப் பெயர்களால் போற்றுகின்றது.
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொதுநெறி காட்டியவர் திருவள்ளுவர்.
- இவர் கி.மு. 31இல் பிறந்தவர் என அறிஞரால் உறுதி செய்யப்பட்டுத் திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடப்படுகிறது.
- தமிழக அரசு, தைத் திங்கள் இரண்டாம் ஞாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகின்றது.
- திருவள்ளுவர், திருக்குறளில் அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தமக்கே உரியதெனக் கொண்டாடும் வகையில் பொதுமைக் கருத்துகளைப் படைத்தவர்.
- திருவள்ளுவர் ஆண்டு கணக்கிடும் முறை
  கிறித்து ஆண்டு (கி.பி) + 31 = திருவள்ளுவர் ஆண்டு.
  எடுத்துக்காட்டு: 2025 + 31 = 2056
  (கி.பி. 2025ஐத் திருவள்ளுவர் ஆண்டு 2056 என்று கூறுவோம்.)

## நூல் குறிப்பு:




- திரு + குறள் = திருக்குறள்.
- திரு – செல்வம் சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத் தன்மை எனப் பல பொருள் கொண்ட ஒருசொல். குறள் – குறுகிய அடி உடையது. ஏழுசீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது, திருக்குறள்.
- மேன்மையான கருத்துகளைக் குறள் வெண்பாக்களால் கூறும் நூலாதலின், திருக்குறள் எனப் பெயர் பெற்றது. இஃது ஈரடிகளில் இயற்றப்பட்டிருப்பினும் விரிவான பொருளைத் தருகின்றது.
- இந்நூல் நாடு, மொழி, இனம், மதம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிற்கிறது: உலகப் பொதுமறை எனப் போற்றப்பெறுகிறது.
- திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது:

## 82. அறநூல் தொடர்பான செய்திகள்

## 83. நாலடியார்

**நூல் குறிப்பு**

- நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும்.
- இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
- நாலடியாரை தொகுத்தவர் பதுமனார்.
- இது அறம் சார்ந்த கருத்துருக்களை கூறுகிறது.
- நாலடியாரில் மொத்த 400 பாடல்கள் உள்ளன.
- இது வெண்பா வகையைச் சார்ந்தது
- நான்கு அடிகளால் ஆன நானூறு பாடல்களை கொண்டதால் நாலடி நானூறு என்றும் அழைப்பர்
- நாலடியார் வேறு பெயர்கள்
  - நாலடி
  - நாலடி நானூறு
  - வேளாண் வேதம்
  - திருக்குறளின் விளக்கம்
- திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது.

| | |
|---|---|
| ➢ பால் – மூன்று (அறம் பொருள் இன்பம்) | ➢ அறத்துப்பால் = 13 அதிகாரங்கள் |
| ➢ இயல் – பன்னிரண்டு | ➢ பொருட்பால் = 24 அதிகாரங்கள் |
| ➢ அதிகாரம் – நாற்பது | ➢ இன்பத்துப்பால் = 3 அதிகாரங்கள் |

- நாலடியாரின் முதல் இயல் துறவறவியல்
- முப்பெரும் அற நூல்கள்: திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு
- நாலடியாரை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்துள்ளார்.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் உள்ள ஒரே தொகை நூல் நாலடியார்
- நாலடியாரை முப்பாலாக பகுத்தவர் – தருமர்
- நாலடியாருக்கு உரை கண்டவர் தருமர், பதுமனார்
- நாலடியாரின் உரைகளை உள்ளடக்கியது "நாலடியார் உரைவளம்" என்னும் நூல்.
- நாலடியார் முத்தரையர் பற்றி கூறுகிறது.

# 93. தமிழின் சிறப்பு மற்றும் திராவிட மொழிகள்

## வளர்தமிழ்

- மனித இனப் பரிணாம வளர்ச்சியின் சிறப்புகளுள் ஒன்று மொழி. மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது மொழி. மொழி, நாம் சிந்திக்க உதவுகிறது: சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது. பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே.
- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவற்றுள் சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம். எழுத்து வடிவம் ஆகிய இரண்டையும் பெற்றுள்ளன.
- உலக மொழிகள் பலவற்றுள் இலக்கண, இலக்கியவளம் பெற்றுத் திகழும் மொழிகள் மிகச்சிலவே. அவற்றுள் செம்மை மிக்க மொழி என ஏற்றுக் கொள்ளப்பட்டவை சில மொழிகளே. தமிழ்மொழி அத்தகு சிறப்பு மிக்க செம்மொழியாகும்.
- தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசை இனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை. பல மொழிகள் கற்ற கவிஞர் பாரதியார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்

என்று தமிழ்மொழியின் இனிமையை வியந்து பாடுகிறார்.

### மூத்தமொழி

என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்!

என்று பாரதத்தாயின் தொன்மையைப் பற்றிப் பாரதியார் கூறிய கருத்து தமிழ்த்தாய்க்கும் பொருந்துவதாக உள்ளது.

- சாலைகள் தோன்றிய பிறகே சாலை விதிகள் தோன்றியிருக்கும். அதுபோல இலக்கியம் தோன்றிய வேண்டும்.
- தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைமையான இலக்கண நூல் ஆகும்.

### எளிய மொழி

- தமிழ்மொழி பேசவும் படிக்கவும் எழுதவும் உகந்த மொழி.
- உயிரும் மெய்யும் இணைவதால் தோன்றுபவை உயிர்மெய் எழுத்துகள்.
- உயிர் எழுத்துகள். மெய் எழுத்துகள் ஆகியவற்றின் ஒலிப்பு முறைகளை அறிந்து கொண்டால் உயிர்மெய் எழுத்துகளை எளிதாக ஒலிக்கலாம்.
- தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். இதற்கேற்ப, தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன.

(எ.கா.) வலஞ்சுழி எழுத்துகள் – அ. எ. ஔ. ண. ஞ

இடஞ்சுழி எழுத்துகள் – ட, ய, ழ

- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு

1. "ஸ' எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது.

2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை.

3. எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை

தமிழ் எழுத்துகள்

- காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.
- தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது.
- கல்வெட்டுகள் கி.மு. (பொ.ஆ.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- செப்பேடுகள் கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
- கல்வெட்டுகள் செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.
- வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்.
- தமிழெழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும்.
- சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம்பெற்றுள்ளன.
- முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன.
- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி (சிலம்பு: 112) என்னும் தொடரால் அறியலாம்.

தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

வரிவடிவ வளர்ச்சி

- பண்டைக்காலத்தில் தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை. அவை காலத்திற்கேற்பப் பல உருவ மாற்றங்களைப் பெற்றுத்தான் இக்கால வடிவத்தை அடைத்திருக்கின்றன.
- இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன.

## 94. தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்

## 95. உ.வே. சாமிநாத ஐயர்

### தமிழ்நாட்டில் காந்தி

- 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது.அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார்.
- உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

### தமிழ்த்தாத்தா உ. வே. சா.

- பிழை இல்லாமல் எழுதவேண்டும் என்பதற்காக, உ. வே. சா. வெவ்வேறு சுவடிகளை வைத்துப் பலமுறை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே, அவற்றை அச்சுக்கு அனுப்பினார். அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளை வாசித்து, நமக்காகத் தாளில் எழுதி, அச்சிட்டுப் புத்தகமாக வழங்கினார் உ. வே. சாமிநாதர்.
- நாம் அவ்விலக்கியங்களைப் படிப்பதற்காக அவர் ஓய்வின்றி உழைத்தார். அதனால், அவரைத் தமிழ்த்தாத்தா உ. வே. சா. என்று அன்போடும் உரிமையோடும் நாம் அழைக்கிறோம்.
- 'குறிஞ்சிப்பாட்டு' என்னும் சுவடியை அச்சில் பதிப்பிப்பதற்காக எழுதிக் கொண்டிருந்தார். அச்சுவடியில் தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இருந்தன. அவற்றுள், தொண்ணூற்று ஆறு பூக்களுடைய பெயர்கள் மட்டுமே தெளிவாக இருந்தன: மூன்று பூக்களின் பெயர்கள் தெளிவாக இல்லை. ஆனால், மூன்றே மூன்று பூக்கள் தானே தெரியவில்லை என அவர் விட்டுவிடவில்லை. அந்தப் பூக்களின் பெயர்கள் தெளிவாக உள்ள சுவடி யாரிடமாவது இருக்காதா என்று மறுபடியும் ஊர்ஊராக, வீடுவீடாகத் தேடிச் சென்றார். (குறிஞ்சிப்பாட்டு – பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று: இதன் ஆசிரியர் கபிலர்) பல மாதங்கள் கழித்து, அவர் தேடிய பூக்களின் பெயர்கள் உள்ள சுவடி ஒன்று கிடைத்தது. அதன் பிறகே அந்நூலை அச்சுக்குக் கொடுத்தார். எதனையும் அரைகுறையாகச் செய்ய விரும்பாத சுறுசுறுப்பான அந்தத் தாத்தா, தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பதிப்புப் பணியை மேற்கொண்டார்.
- அவர் பிறந்த ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம்.
- அவருடைய இயற்பெயர் வேங்கடரத்தினம்.
- அவருடைய ஆசிரியரின் பெயர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம். அவருடைய ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன். அதனால் அவர், உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமாகவே உ. வே. சா. என்று அழைக்கப்பட்டார்.
- 19.02.1855ஆம் ஆண்டு பிறந்த அவர், 28.04.1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அஃது என் சரிதம் என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

## 98. தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள்

## 99. தேவநேய பாவாணர்

### நூல் வெளி

- மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது.
- பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.
- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்.
- உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

| | | |
|---|---|---|
| பிறப்பு | 1902 பிப்ரவரி 7 | |
| இறப்பு | 1981 ஜனவரி 15 | |
| பெற்றோர் | ஞானமுத்து, பரிபூரணம் | |
| பிறந்த ஊர் | சங்கரன்கோவில் | |
| சிறப்புப் பெயர் | தேவநேயப் பாவாணர் 174 சிறப்புப் பெயர்களை பெற்றுள்ளார். | |
| | செந்தமிழ் ஞாயிறு<br>மொழிஞாயிறு<br>தனித்தமிழ் அரிமா<br>தமிழ் பெருங்காவலர்,<br>சொல்லாராய்ச்சி வல்லுநர் | செந்தமிழ்ச் செல்வர்.<br>தனித்தமிழ் ஊற்று<br>இலக்கியப் பெட்டகம்,<br>இலக்கணச் செம்மல்<br>தமிழ்மானம் காத்தவர்,<br>தமிழ் பெருங்காவலர் |
| பட்டங்கள் | தென்மொழி இயக்கம் பாவாணருக்கு "மொழிஞாயிறு" வழங்கியது. | |
| | மதுரை தமிழ்காப்புக்கலம்பகம் பாவாணருக்கு தமிழ் விருதினை வழங்கியது | |
| | "செந்தமிழ் ஞாயிறு விருதினை "பாவாணருக்கு குன்றக்குடி அடிகளார் பாரிவிழாவில் வழங்கினார் | |
| | தமிழக அரசால் பாவாணருக்கு செந்தமிழ்ச் செல்வர் பட்டம் வழங்கப்பட்டது | |
| முக்கியமான படைப்புகள்: | தமிழ் வரலாறு<br>முதல் தாய்மொழி<br>தமிழ்நாடு விளையாட்டுகள்<br>உயர்தரக் கட்டுரை இலக்கணம்<br>சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்<br>திருக்குறள் மரபுரை | தமிழர் திருமணம்<br>வடமொழி வரலாறு<br>தமிழர் மதம்<br>மண்ணிலே விண்<br>பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் |
| சிறப்புகள் | தமிழை ஆலென வளர்த்து அதனை மாண்புற செய்தவர் | |
| | தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர் | |
| | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் | |
| | தேவநேயப் பாவாணர் 08.05.1974 செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியமர்த்தப்பட்டார் | |